RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2439

# தொல்காப்பியக் காலப் பெண்கள் மற்றும் சங்ககால பெண்களின் சமுதாய நிலை

**க. ரத்தினம்மாள் [அ, *]**

[அ] தமிழ்த்துறை, சக்திகைலாஷ் மகளிர் கல்லூரி மாட்லாம்பட்டி - தருமபுரி, தமிழ்நாடு, இந்தியா.

# Social Status of Women in Tholkkapiyar Period and Sangam Period

**K. Rathinammal [a, *]**

[a] Department of Tamil, Sakthikailash Women's College, Dharmapuri, Tamil Nadu, India

* Corresponding Author: rathinammal@gmail.com

Received: 20-03-2024
Revised: 08-07-2024
Accepted: 12-07-2024
Published: 17-07-2024

Check for updates

**ABSTRACT**

Feminism was predominant during the Thaiatchi period, which preceded the Tholkkapiyar period. About two thousand five hundred years ago there are no poets or scholars in this world who do not celebrate equality, status, dignity and the glory of women. The status of such women has seen many changes in literature over time. A civilized country is a country that protects women's birth rights. It is an accepted fact that the civilization of a country depends on the condition of its women. Where women indulge in the pleasures of their birth right without restraint, and their men become sophisticated in their civilization. The purpose of this article is to examine the character of women, the intelligence of a friend, and about other women characters shown in the book Tolkappiyar.

**Keywords:** Feminism, Tholkappiyam, Tolkappiyar, Sangam Literature

## முன்னுரை

பெண்களின் பிறப்புரிமைகளைப் பாதுகாக்கும் நாடே நாகரிகப் பண்பாடு மிக்க நாடாகும். “ஒரு நாட்டின் நாகரிகம் அந்த நாட்டின் பெண்மக்கள் நிலையைப் பொறுத்து நிற்கிறதென்பது எவரும் ஏற்கத்தக்க உண்மை. பெண்மக்கள் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி இடுக்கணுமின்றிப் பிறப்புரிமை இன்பத்தை எங்கே நுகர்கிறார்களோ, மேலும் அங்கேயுள்ள ஆண்மக்கள் தன் நாகரிக நுட்பமுணர்ந்தவர்களாகிறார்கள். அந்நாடே நாகரிகம் பெற்றதாகும்” என்ற கருத்து நினைத்ததற்குரியது.

இந்நூல் தொல்காப்பியர் காட்டும் பெண்களின் தன்மை, தோழியின் அறிவுத்திறம், செவிலியின் செயல், நற்றாய், பரத்தையர், பண்புகள் ஆகியவற்றை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தொல்காப்பியர் காலத்தில் பெண்கள் நிலை

ஆண், பெண் சமத்துவத்தை தொல்காப்பியர் காலம் ஏற்றுக்கொள்ளவில்லை. பண்டைக்காலம் முதல் இன்று வரை என்றாலே மென்மையானவள் என்ற கருத்து நிலவுகிறது. பெண் இயல்பாகவே அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற குணங்களை உடையவள் என்று

கூறப்படுகிறது. இத்தகைய இயல்புகள் உடையவர்களாகத் தொல்காப்பியர் காலப் பெண்கள் சுட்டப்படுகின்றனர். இதனை,

"அச்சமும் நாணும் மடனும் முந்துறத்த

நிச்சமும் பெண்பாற் குரிய என்ப" (களவு 8)

"உயிரும் நாணும் மடனும் என்றிவை

செயிர்தீர் சிறப்பின் நால்வர்க்கும் உரிய" (பொருள் 7)

என்று தொல்காப்பியர் விளக்குகிறார். இவ்வியல்புகளை உடையவராக இருப்பதால்தான் தலைவி தன் காதலைத் தலைவனிடம் நேரடியாகக் கூற இயலாதவாளக இருக்கிறாள் எனத் தெரிகிறது.

## கற்பு

பெண்களுக்கு உயிர் போன்றது கற்பு. கற்பின் வழி நடப்பு பெண்களுக்குச் சிறப்பு, இதனை,

"உயிரினும் சிறந்ததன்று நாணே நாணினும்

செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று" (களவு 23)

"கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்

கிழவோள் மாண்புகள்" (கற்பு 11)

என்று தொல்காப்பியர் கூறுகின்றார். உடன்போக்குக்குப் பின் தலைவன் பிரிந்த போது தலைவி தோழியின் துணை கொண்டு கற்பு நெறியில் நிற்பவள் என்பதை,

"போக்குடன் அறிந்தபின் தோழியொடு

கெழீஇக்

என்ற நூற்பாவின் மூலமாக பெண்களுக்குரிய பண்புகளை வரையறுத்தார். இவற்றுடன் பிறர்பால் அன்பு காட்டுதல் நல்லல ஒழுக்கங்களை க் கடைபிடித்தல், மென்மை தன்மையுடையவளாதல் பொறுமை காட்டல் என்பவற்றையும் பின்பற்றுதல் வேண்டும் என்கிறது.

முந்நீர் வழக்கம் மகடூவோடில்லை (ஆகத்-34)

எண்ணரும் பாசறை பெண்ணொடும் புணரார் (கற்பு.34)

என்று தொல்காப்பியர் கூறுகிறார். தலைவன் தன் காதல் நிறைவோத போது தன் காதலை தலைவிக்கும் ஊரார்ர்க்கும் தெரிவிக்கம் நோக்கம் மடலேறுதல். இது ஆண்களுக்கு மட்டுமே இருந்தது. இவ்வழக்கம் பெண்களுக்கச் சிறந்ததன்று என எண்ணினார்.

## தலைவின் தன்மை

தலைவி தன் விருப்பத்தை நேரடியாக உணர்த்தாமல் மறைமுகமாகக் குறிப்பதாலும், சூழ்நிலையாலும் உணர்த்தும் தன்மை உடையவள் தலைவனுக்கு எதிர் நின்று அவன் சொன்னவற்றிற்கு மறுத்துப் பேசியவளாகச் சுட்டப்படவில்லை குறிப்பால் உணர்த்தும் தன்மையை,

"காமத்திணையில் கண்ணின்று வரூஉம்

நாணும் மடனும் பெண்மைய ஆதலின்

குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை

நெறிப்பட் வாரா அவள் வயினான" (களவு17)

கன்னுறு வேட்கை கிழவன்முன் கிளத்தல்

எண்ணுங் காலைக் கிழத்திற்கு இல்லை (களவு (27)

என்று தொல்காப்பியர் கூறுகின்றார். களவு ஒழுக்கத்தில் தலைவி பேசிய இடங்களை சில நூறற்பாக்களில் கூறுகின்றார்.

தலைவி தலைவனுக்கு எதிராக நின்று எதிர்த்து பேசவில்லை (களவு 19) தலைவி தன்னைப் புகழ்ந்து தலைவனுக்கு முன் பேசியதும் இல்லை. (கற்பு 39) என்று கூறுகிறார். கற்பு ஒழுக்கத்தில் தலைவி பரத்தைமை காரணமாகவும் இல்லறம் நடத்தும்போது தலைவி அஞ்சுகின்ற அச்சத்தையும் தொல்காப்பியர் கூறுகின்றார்.

## தோழியின் அறிவுத் திறம்

தொல்காப்பியர் காட்டும் தோழி அறிவு நிரம்பியவளாகவும், உலகை நன்கு அறிந்தவளாகவும் இருக்கின்றாள். தோழியின் அறிவை தலைவன், தலைவியின் உணர்வை உணர்ந்து அதற்கேற்றார் போல் செயல்படும் திறத்தின் மூலம் தெரிகின்றது. இதனை

"குறையுற உணர்தல் முன்னுற உணர்தல்

இருவரும் உள்வழி அவன்வர வுணர்தலென

மதியுடன் படுத்தல் ஒருமூ வகைத்தே" (களவு 37)

என்று கூறுகின்றார். தோழியின் விடாமுயற்சியை தலைவன் தலைவியின் நிலையை உணர்ந்த தோழி அவர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்து இருவரையும் சேர்த்து வைக்கும் ஆற்றல் உடையவள் என்று கூறுகின்றார். மனவுறுதியை

"உறுகண் ஓம்பல் தன்னியல் பாகலான்

உரியதாகும் தோழிகண் உரனே" (பொருள்.45)

என்று கூறுகின்றார். தோழி மட்டுமே தலைவன் தலைவியை புகழ்தல், தலைவன், தலைவியும் சந்திக்கும் இடத்தை தேர்வு செய்தல், தலைவிக்காக தோழி அறத்தோடு நின்றதை உடன்போக்கின் போது தோழி அடைக்கலம் தேடிக் கொடுத்ததை,

"ஓம்படக் கிழவிட் பாங்கின் கண்ணும்" (களவு 24)

மேலும் தோழி பேசும் பல இடங்களை அறிவுமிக்கவள் எதையும் எதிர்கொள்ளும் மன உறுதியுடையவள், நினைத்ததை சாதிக்கும் தைரியம் உடையவள் எனத் தெரிகின்றது.

## பரத்தையர் பண்பு

பரத்தையர் என்போர் ஒருவரையும் மணம் செய்து கொள்ளாமல் மன்னர், செல்வந்தர் போன்றோர்க்கும், ககாமுகர்க்கும் இன்பம் நல்கும் உதிமையுடையப் பெண்களாக வாழ்ந்து வந்துள்ளனர். தம்மை நாடி இன்பம் துய்ப்போர் தரும் பொருளில் வாழ்க்கை நடத்தினர். அதனால் பொருட்பெண்டிர் எனவும் கூறப்பட்டனர். இவர்களை காமக்கிழத்தி, பரத்தை மாயப்பரத்தை என்றும் கூறுவர்.

"காமம் சான்ற கடைக்கோட்

காலை

ஏமம் சான்ற மக்களோடு

துவன்றி

அறம்புரி சுற்றமொடு

கிழவனும் கிழத்தியும்

சிறந்தது பயிற்றல்

இறந்ததன் பயனே" (1138)

கலைஞர்களிடையே ஆண், பெண் வேறுபாடின்றி இருவரும் சமமாகப் போற்றப்பட்டிருக்கிறார்கள். கூத்தர், பாணர், பொருநர் இவர்களுடன் விறலியும் இருந்திருக்கிறாள்.

காமக்கிழத்தி என்பவள் தலைவனது செல்வநிலையை அறிந்து தலைவன் மீது அன்பு பூண்டு வாழ்க்கை நடத்தும் அயல் மகளிர், தலைவன் மீதும், தலைவனின் குடும்பத்தின் மீதும் அக்கறை உடையவளாகத் திகழ்பவள். இவர்களை இல்லக் கிழத்தி என்றும் கூறுவர். இதனை,

"காமக் கிழத்தி மனையோள் என்றிவர்

ஏமுறு கிளவி சொல்லிய எதிரும்" (கற்பு 5)

என்றுதொல்காப்பியர் கூறுகின்றார். தலைவிக்கு அடுத்த நிலையில தலைவனுக்காக இருப்பவள் எனத் தெரிகிறது.

## சங்க இலக்கியங்களில் பெண்கள் நிலை

தொல்காப்பிக் காலத்தைப் போன்று சங்க காலத்திலும் பெண்களுக்குக் "கற்பு" எனும் பண்பு வற்புறுத்தப்பட்டது.

பெண்கள் தன் வாழ்கைக் துணைவரைப் பலப் போராட்டங்களுக்கிடையே தாமே தேர்ந்தெடுத்துக் கொண்டனர். பெண்கள் தாம் விரும்பிய காதலரோடு வாழ "அறத்தொடு நிற்றல்" எனும் கோட்பாட்டைப் பின்பற்றினர் "பெற்றோர் திருமணம் செய்து வைக்காத நிலையில் காதலரோடு உடன்போக்கு கொள்ளும் துணிவைப் பெற்றனர் பெண்பிறவி இழிவுக்குரியது என நினைத்தது இல்லை. மணக்கொடை (வரதட்சணை) கொடுமை அக்காலச் சமுதாய அமைப்பில் இல்லை என்பதையும் அறிய முடிகின்றது.

சங்க காலத்தில் போர் தடுக்க முடியாததாக இருந்ததால் தாய்மார்கள் தங்கள் மகனைப் போருக்கு அனுப்பி வைத்தனர்.

"ஒரு மகன் அல்லது இல்லோள்

செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே"

என்ற வரிகள் பெண்களின் மனவலிமையையும் வீரப் பண்பினையும் உணர்த்தும்

தலைவனோடு உடன்போக்குச் சென்ற மகளை நினைத்து தாய்புலம்பல்

"சுடர்வாய் நெடுவேல் காளையோடு

மடமா அரிவை போகிய சுரனே"

ஒளி பொருந்திய நொடிய வேலை உடைய தலைவனது தலைவி சென்ற பாலை நிலம் மணல் மிக்கப் பரவப்பட்டு மரத்தினை நிழல் பொருந்தி குளிர்ந்த மழை பெய்தாக வேண்டும் என்று தலைவியின் தாய் வாழ்த்தி வணங்குகின்றாள்.

சங்க கால இலக்கியங்களில் அக்கால சமுதாய அமைப்பை நன்கு அறிந்து ஆண் ஆதிக்கத்தை உணர்ந்து, விட்டுக்கொடுத்து அன்பிற்கே முதலிடம் தந்து நம்பிக்கையுடன் வாழப் பழகிக்கொண்ட பெண்களை காணமுடிகின்றது. மேலும் சங்க காலத்தில் பெண்களுக்கு எவ்வித பொருளாதார உரிமையும் இல்லை. என்பதாலும் ஆண் ஆதிகத்தை முழுமையாக ஏற்று வாழும் மனப்பக்குவத்தை வளர்த்துக்கொண்டனர்.

## முடிவுரை

தொல்காப்பியர் காலத்திற்கும் முந்தைய காலமான தாயாட்சி காலத்தில் பெண்ணியம் முதன்மை பெற்றிருந்தது. சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்ச் சமூகத்தில் பெண்களின் நிலை, கடமைகள், ஏற்றத்தாழ்வுள் மற்றும் பெண்கள் பெருமைகளைப் போற்றாத கவிஞர்களோ, அறிஞர்களோ இவ்வுலகில் இல்லை. இத்தகைய பெண்களின் நிலை இலக்கியத்தில் காலந்தோறும் பல மாற்றங்கள் கண்டுள்ளது. சங்க காலத்தில் நிலவிய பண்மகளிர் மனத்தை எதிர்த்தும், பரத்தையார் உறவை வெறுத்தும், பிறனில் விளையாமையை வலியுறுத்தியும், வள்ளுவர் முதன் முதலில் தனது குறளை எழுப்பினார். இன்று பெண்கள் கல்வி, பகுத்தறிவு துணிச்சல், விவேகம் , நாடாளும் திறன் போன்ற ஆளுமை பண்புகளில் மேலாங்கி பெண்களால் புதியதோர் உலகை படைக்க முடியும் என்ற நிலையில் மேம்பட்டு வருவதை காண முடிகிறது.

## References

**சான்றெண் விளக்கம்**

1. திரு.வி.க பெண்ணின் பெருமையை (அ) வாழ்க்கைத் துணை
2. பி.எ.சாமி தமிழ் இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு
3. தொல்காப்பியம், களவியல் நூற்பா
4. தொல்காப்பியம், புறத்திணையியல் நூற்ப
5. தொல்காப்பியம் அகத்திணையியல்
6. குறுந்தொகை பாடல் 203
7. ஐங்குறுநூறு சோழர் பத்து கபிலர் பாடல்,

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License